# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ம் தேதி காலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கை

---

**முன்னிலை: சு. மூர்த்தி.,**
**தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர் , இராமேஸ்வரம் நகராட்சி**

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | இராமேஸ்வரம் நகராட்சியில் நடைபெறவிருக்கும் சாதாரண உள்ளாட்சி தேர்தல் 2021ற்கு தேர்தல் விழிப்புணர்வு விளம்பரங்கள் மற்றும் இதர தேர்தல் செலவினங்களை அவசர அவசியம் கருதி ரூ.50000/—ஐ திரு.ஆ.செந்திவேல் இளநிலை உதவியாளர் வசம் முன்பணமாக வழங்கி தேர்தல் செலவினங்களை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு:<br><br>1. அனுமதிக்கலாம்.<br>2. தேர்தல் பணியின் அவசர அவசியம் கருதி தேர்தல் செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | தீர்மானம் எண். 559 அனுமதிக்கப்பட்டது. |
| 2 | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் தினசரி குடிநீர் விநியோகம் செய்வதற்கும் 22 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளை இயக்குவதற்கும் மேலும் குடிநீர் நீரேற்று நிலையங்கள் மற்றும் | தீர்மானம் எண். 560 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | மேல்நிலை தொட்டிகள் காவலர்பணி மற்றும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிசெய்து வருவதற்கும் 18 நபர்கள் அடங்கிய விவோகனந்தர் ஆடவர் சுயஉதவிக்குழு மூலம் செயல்படுத்திட தனி அலுவலர் / ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>மேலும் 18 நபர்களுக்கான ஊதியத்தினை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்: pdl.A3/614/2020 நாள் : 29.07.2020ன் படியும் 2020–2021 ஆண்டு மாவட்ட ஆட்சியர் இராமநாதபுரம் அவர்களின் தரவிலை பட்டியல் அட்டவணைப்படி ஆகஸ்ட் 2021 முதல் 6 மாத காலங்கள் ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் வழங்கிட ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு தனிஅலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>1. அனுமதிக்கலாம், குடிநீர் விநியோக நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும் பொதுமக்களுக்கு தடையின்றி தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்து வர வேண்டியுள்ளதாலும், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று 18 நபர்களை விவேகானந்த ஆடவர் சுயஉதவிக்குழு மூலம் பணி செய்து வரவும் அனுமதிக்கலாம். | |
| **3** | இராமேஸ்வரம் நகராட்சியில் அலுவலக செயல் பொருள் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான ஒருங்கிணைந்த மின் ஆளுமையின் (**Urban Tree Information System)** கீழ் கணினி மயமாக்கப்பட்டு 2016 முதல் செயல்முறையில் உள்ளது. அலுவலகப் பணி மேம்படும் வண்ணம் சம்பளப் பட்டியல், கட்டிட | தீர்மானம் எண். 561 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | உரிமம், புதிய கணக்கு முறை, வாகன பராமரிப்பு, திடக்கழிவு மேலாண்மை போன்றவைகள் கணினி மூலம் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.<br>மேலும், இந்நகராட்சி மத்திய அரசால் **<u>Atal Mission for Rejuvenation and Urban Transformation</u>** திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து இந்நகராட்சி தொடர்பான Reforms பதிவேற்றம் செய்தல் ,**<u>Service Level Bench Mark</u>** பதிவேற்றம் செய்தல் ஆகிய பணிகளும், **<u>Green Rameswaram</u>** தொடர்பான பணிகள் , மத்திய நிதிக்குழு ஆணையத்தின் **<u>Performance Grant</u>** தொடர்பான விபரங்களை வலைதளத்தில் பதிவேற்றம் செய்தல் , சாலையோர வியாபாரிகளுக்கான **<u>Prime Minister's Street Vendors Atmanirbhar Nidhi (PM SVANidhi)</u>** திட்ட பணிகள் மற்றும் மத்திய / மாநில அரசின் திட்டப்பணிகள் தொடர்பான அறிக்கைகளை மத்திய அரசின் வலைதளத்தில் பதிவேற்றம் அவ்வப்போது தெரிவிக்கப்பட்டு வருவதால் கணினி பயன்பாட்டிற்கு கூடுதலாக ஒரு கணினி இயக்குபவரை, PWD Schedule of Rate 2021-2022-இல் Sch.item No : 89B விலைவிகித அடிப்படையில் பணியமர்த்து வதற்கும் **01–12–2021** முதல் **30–11–2022** வரை ஒருவருடத்திற்கான உத்தேச செலவினம் ரூ.**3.00** இலட்சத்திற்கு தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>• அனுமதிக்கலாம். | |
| **4** | இராமேஸ்வரம் நகராட்சி அலுவலகம் மதுரை – தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலையில் வர்த்தகன் தெருவில் அமைந்துள்ளது. அலுவலகத்தின் தெற்குப்பகுதியில் கடல் அமைந்துள்ளதால், நகரில் பெய்திடும் மழைநீர், திட்டகுடி சந்திப்பு வழியாக அலுவலகம் முன்புறம் வரை வந்து அதன்பின்பு மார்க்கெட் தெரு, விளையாட்டு மாரியம்மன் கோயில் தெரு வழியாக கடலை சென்றடைகிறது. இந்நிலையில், சாலையில் | தீர்மானம் எண். 562 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | செல்லும் மழைநீர் நகராட்சி அலுவலக வளாகம் தாழ்வாக இருப்பதால், வளாகத்திற்குள் மழைநீர் தேங்கி நிற்கிறது. இதனால் அலுவலக வளாகத்தில் மழைநீர் நிற்பதுடன், வடிந்தவுடன் சகதியாக காட்சியளிப்பதால், அலுவலத்திற்குள் பொதுமக்கள் மற்றும் பணியாளர்கள் சென்று பணியாற்றுவதற்கு சிரமாக உள்ளது. எனவே, அலுவலக சூழலை மேம்படுத்திட விடுபட்ட பகுதியில் பேவர்பிளாக் தளம் அமைத்தல், முன்புறம் வடிகால், பாலம் கட்டுதல், சுற்றுச்சுவர் மராமத்து செய்தல், போர்டிகோ, தளங்களை உயர்த்தி ப்ளோரிங், நான் ஸ்கிடு டைல்ஸ் கட்டுதல், போன்ற பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இதற்கான மதிப்பீடு ரூ.9,80,000/– க்கு தயார் செய்யப்பட்டுள்ளது. தனி அலுவலரின் பார்வைக்கும், நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>1. அனுதிக்கலாம் வருவாய் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும், வரும் மழைக்காலத்திற்குள் மேற்காணும் பணியினை முடித்தால்தான், அலுவலக சூழல் மேம்படும், பொதுமக்களிடம் அலுவலகம் குறித்த நற்பண்பு, மேம்படும் எனப்தால், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்தையும் மன்றம் அங்கீகரிக்காலம். | |
| **5** | இராமேஸ்வரம் நகராட்சி அலுவலக வளாகம் பேவர்தளம் மற்றும் சுற்றுச்சுவர் மேம்படுத்துதல் பணிக்கான ரூ. **9,80,000/–** க்கான மதிப்பீட்டு பணிக்கு **05.02.2021** ம் தேதிய முன் அனுமதி உத்தரவில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்படி பணிக்கு முதன் முறையாக **25.02.2021** ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். 563 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | 1. சி. சுப்ரமணியன், ஒப்பந்ததாரர், இராமேஸ்வரம் நகராட்சி — மதிப்பீட்டினை காட்டிலும் 0.40% குறைவு<br>2. பி.என். சுந்தரம், ஒப்பந்ததாரர், இராமேஸ்வரம் நகராட்சி — மதிப்பீட்டினை காட்டிலும் 1.50% அதிகம்<br>**அலுவலகக்குறிப்பு:**<br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டினைக்காட்டிலும் **0.40**ரூ குறைவாக கொடுத்துள்ள திரு. சி. சுப்ரமணியன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும், வரும் மழைக்காலத்தினை எதிர்நோக்கி முன்கூட்டியே பணி மேற்கொள்ள வேண்டி உள்ளதாலும், அலுவலக நலன் கருதியும், காலதாமதத்தினை தவிரிக்கும் பொருட்டு, மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம். | |
| **6** | இராமேஸ்வரம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் **09** பகுதியில் அமைந்துள்ள நடராஜபுரம் நாடகமேடை கட்டிடம் தரைப்பகுதிக்கு NON – SKID TILES பதித்திடவும், அரசு மருத்துவமனை மதுரை– தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் சிறுபாலம் அமைத்திடவும், திட்டகுடி தரைமட்ட தொட்டி வைப்பதை முன்பகுதியில் ஷெட் அமைத்திடவும், மற்றும் பர்வதம் சாலை நியாய வளாக கட்டிடத்திற்கு கூடுதல் அத்தியாவசிய பணிகள் மேற்கொள்ளவும் ரூ. **5,00,000/–** க்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தனி அலுவலரின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | தீர்மானம் எண். **564** அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>1) அனுமதிக்கலாம் நகராட்சி வருவாய் நிதியில் நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>2) அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும், மேற்கொணும் அத்யாவசிய பணிகளை காலதாமதமின்றி மேற்கொள்ள வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி பணி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **7** | இராமேஸ்வரம் நகராட்சி வார்டு எண்:9–க்குட்பட்ட நடராஜபுரம் நாடக மேடையில் அபிவிருத்தி பணிகள் செய்து, அரசு மருத்துவமனை மதுரை–தனுஷ்கோடி தேசிய நெடுஞ்சாலை சந்திப்பில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு 06–08–2021 அன்று தனிஅலுவலர் (ம) ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி அவர்களின் முன் அனுமதி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 25–08–2021 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் தனிஅலுவலரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>1. M. முனியசாமி பாண்டியன், ஒப்பந்ததாரர்,இராமேஸ்வரம். — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.40% குறைவு<br>2. P.N சுந்தரம், ஒப்பந்ததாரர் இராமேஸ்வரம். — மதிப்பீட்டினைக்காட்டிலும் 1.50% அதிகம் | தீர்மானம் எண். 565 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:**<br><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.40% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.M.K திருமுருகன், இராமநாதபுரம் என்பவரின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **8** | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண் :3812/2012/ டபுள்யு .எஸ் 1 நாள் 27.08.2021 ல் மழைநீர் சேகரிப்பினை செயல்படுத்துவதில், தமிழ்நாடு முன்னோடி பலமையாக உள்ளது எனவும், தேவையான விதிகள் தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டிட விதிகள் 2019 ல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே வடகிழக்கு பருவமழை காலத்திற்குள், மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவம் கருதி நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு நல்லமுறையில் உள்ளதா புணரமைக்க வேண்டியுள்ளதா அல்லது புதிதாக கட்டமைப்பு அமைக்க வேண்யுள்ளதா என ஆய்வு செய்து பணி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டு வந்துள்ள கடிதம் தனி அலுவலரின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>மேற்படி சுற்றறிக்கை கடித அறிவுரையின்படி, இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் ஆய்வு செய்யப்பட்டு அதில் புனரமைப்பு மற்றும் புதிதாக மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் மேற்கொள்ள வேண்டிய | தீர்மானம் எண். 566 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 21 எண்ணிக்கை கட்டிடங்களுக்கு மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளதை தனி அலுவலரின் பார்வைக்கும், நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>1. அனுமதிக்கலாம், வருவாய் நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும், வருகின்ற வடகிழக்கு பருவமழை காலத்திற்குள்பணியினை முடிக்க வேண்டியுள்ளதால், மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரி நடடிவக்கை தொடர்ந்ததையும் ஏற்கலாம். | |
| **9** | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்து வர 52.00 கி.மீ நீளத்திற்கு குடிநீர் பகிர்மானக் குழாய்கள் மற்றும் நீர் ஏற்றும் குழாய்கள் அமைந்துள்ளது. இந்நிலையில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மத்திய, மாநில அரசின் சாலை விரிவாக்க பணிகள் காரணமாகவும் அவ்வப்போது ஏற்பட்டு வரும் குடிநீர் குழாய் உடைப்பு மற்றும் அடைப்பு ஏற்பட்டதை சரிசெய்து வரவும், சாலை விரிவாக்கத்திற்கு குழாய்களை அகற்றி சாலை ஓரத்திற்கு கொண்டு சென்று பதிக்கவும் வேண்டியுள்ளது.<br><br>மேலும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் கம்பங்கள் தோண்டும் போது ஏற்படும் உடைப்பு, UGSS தோண்டும் பணி மற்றும் சாலை ஓரங்களில் உள்ள மரங்களின் வேர்களால் பகிர்மான குழாய் மற்றும் குடிநீர் நீரேற்றம் செய்து வரும் குழாய்கள் சேதமடைவதை தவிர்த்து பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்திட வேண்டியுள்ளது. | தீர்மானம் எண். 567 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இந்நிலையில் குடிநீர் பழுதுநீக்கப்பணிகள் செய்திடவும், போதுமான பணியாளர்கள் இல்லை. எனவே, பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்து வரும் பொருட்டு குடிநீர் விநியோக உதிரிப்பொருட்கள் வாங்கிடவும் மராமத்து பணிகள் தொடர்ந்து செய்து வரவும் ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தனிஅலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>1. அனுமதிக்கலாம். குடிநீர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து பணி மேற்கொள்ளலாம்.<br>2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **10** | வடகிழக்கு பருவமழை 2021 முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாகவும், சென்ற வருடத்தில் பெய்த மழையில் மழைநீர் தேங்கி நிற்கும் பகுதிகளான காந்தி நகர், அண்ணா நகர், திருவள்ளுவர் நகர், நடராஜபுரம், அட்டமால் தெரு மற்றும் கச்சக்குளம் பகுதியில் அதிகப்படியான மழைநீர் தேங்கி நின்று ஏற்கவே உள்ள தளவாடச்சாமன்களை கொண்டு மழைநீரை வெளியேற்றுவதில் கால தாமதம் ஏற்பட்டு பொதுமக்கள் மிகவும் சிறமத்திற்கு உள்ளாகி பொதுசுகாதாரக்கேடு ஏற்படும் அபாயம் இருந்தது.<br><br>இத்தகைய குறைகளை களைந்திடவும், மழைநீரை உடன் வெளியேற்றிடவும் 10 ஹெச்பி திறன் கொண்ட டீசல் எஞ்சின்கள் , சக்கரங்கள் பொருத்திய ப்ளாட்பார்முடன் வேண்டிய பகுதிகளுக்கு எளிதில் எடுத்து செல்லும் வகையில் 2 எண்ணிக்கையும், தேவையான குழாய் உதிரிப்பொருட்கள் வாங்கி இருப்பில் | தீர்மானம் எண். 568 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | வைத்து அவசர தேவைகளுக்கு பயன்படுத்தவும், இதற்கான மதிப்பீட்டுத்தொகை ரூ.500000/–க்கு தயார்செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் நிர்வாக அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு:**<br><br>1. அனுமதிக்கலாம். குடிநீர் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து பணி மேற்கொள்ளலாம்.<br>2. அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் வடகிழக்கு பருவமழை 2021 விரைவில் துவங்க உள்ள நிலையில், காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |
| **11** | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் பகிர்மானக் குழாய்கள் மற்றும் நீர் ஏற்றும் குழாய்களில் ஏற்படும் அடைப்பு, உடைப்புகளை சரி செய்ய ரூ.9.30 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு பணிக்கு 25–10–2021 அன்று தனிஅலுவலர் (ம) ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி அவர்களின் முன் அனுமதி பெற்று 11–11–2021 அன்று முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>1. M.K திருமுருகன், ஒப்பந்ததாரர்,இராமநாதபுரம். — மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.19% குறைவு<br><br>2. P.N சுந்தரம், ஒப்பந்ததாரர் இராமேஸ்வரம். — மதிப்பீட்டினைக்காட்டிலும் 1.30% அதிகம் | தீர்மானம் எண். 569 அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | **<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>• வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினைக்காட்டிலும் 0.19% குறைவான விலைவிகிதம் அளித்துள்ள ஒப்பந்ததாரர் திரு.M.K திருமுருகன், இராமநாதபுரம் அவர்களின் விலைவிகிதத்தினை ஏற்கலாம்.<br>• குடிநீர் விநியோகப் பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | |

ஆணையாளர்/தனி அலுவலர்,
இராமேஸ்வரம் நகராட்சி.